# மாகாண கல்வித் திணைக்களம்

## வடக்கு மாகாணம்

### வடிவமைப்பும் நிருமாணத் தொழிநுட்பமும்( 88)

### தரம் 11 ( வினாவிடை)

S. Vakeesan ( Dip. in teaching- DT)

**<u>அலகு 1 கருவிகளினதும் உபகரணங்களினதும் பயன்பாடு</u>**

1. கட்டடநிர்மாணிப்புத்துறையில் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களை வகைப்படுத்தியுள்ள 4 முறைகளையும் குறிப்பிடுக?

   1 உலோகம் சார்ந்தமூலப்பொருள்

   2. அரிமரம் சார்ந்தமூலப்பொருள்

   3 சீமெந்து,சுண்ணாம்பு மற்றும் பரப்பிகள் சார்ந்தமூலப்பொருள்

   4. வேறு மூலப்பொருள் ( நார்,செரமிக்,தார்)

2. கருவிகள் உபகரணங்களை பொதுவாக வகைப்படுத்தியுள்ள 2 முறைகளும் எவை?

   1. கைஉபகரணங்களும் கருவிகளும்

   2. வலுவியக்கு உபகரணங்களும் கருவிகளும்

3. வலு இயக்கு உபகரணங்களின் சிறப்பியல்புகள் 3தருக?

   1. பன்மடங்கு வினைத்திறனைக் கொண்டிருத்தல்

   2 சிறப்பான முடிப்பை பெறமுடிதல்

   3. தொழில்வினைஞரினால் இலகுவாககையாளமுடிதல்

4. கை உபகரணங்களின் சிறப்பியல்புகள் 3 தருக?

   1. அதிககூர்மையை கொண்டிருத்தல்

   2. உறுதி,அதிகம்தேய்வடையாமை

   3. நீடித்தஉழைப்பு

5. கை உபகரணங்களில் காணப்படும் பிரதிகூலங்கள் 3 தருக?

   1. நியம அளவில் அமைந்திராமை

   2. ஒப்பமாக முடிக்கப்பட்டிராமை

   3. கரடுமுரடானதன்மையை கொண்டிருத்தல்

6. கை உபகரணங்கள் தயாரிக்கும் தொழிலில் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் 3 தருக?

1. இவற்றை தயாரிக்க அரசஅனுசரனை குறைவாககிடைத்தல்

2. இளைஞர்கள் இத்தொழிலில் ஆர்வம் காட்டாமை

3. பாரம்பரியதொழிலில் ஈடுபடுவோர் புத்தாக்கத்தில் ஈடுபடாமை

7. கைவாளை பயன்படுத்தி பலகைகளை அரியும்போது பின்பற்றவேண்டிய தொழிநுட்ப முறைகளை கூறுக?

வெட்டுதல் மேற்கொள்ளவேண்டிய இடத்தை அடையாளமிடல்,பின் வாளை கீழிருந்து மேலாக சில தடவைகள் முன்பின்னாக இழுத்தபின்னர் அரிய ஆரம்பிக்கலாம்.

8. சீவுளியை பயன்படுத்தி பலகைகளை சீவும் போது பின்பற்றவேண்டிய தொழிநுட்ப முறைகளை கூறுக?

அரிமரத்தின் குழிவுப்பக்கம் முதலில் தெரிவு செய்யப்படவேண்டும். பின்னர் குறும் சீவுளியால் சீவப்பட்டு மட்டச்சீவுளியால் மட்டமாக்கப்படும். அரிமரசிம்புகள் கிளம்பக்கூடிய திசைக்கு எதிர்த்திசையில் வைக்கப்பட்டு சீவுளியை நேர்கோட்டின் வழியே முன்னோக்கி தள்ளி சீவுதல் வேண்டும்

9. தகடுவெட்டும் கத்தரிக்கோல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

1. மழைப்பீலிகளை இடல் 2. மெல்லியதகடுகளைபயன்படுத்திசெய்யபடும்வேலைகள்

10. நீர் மட்டத்தின் பயன்பாடு யாது?

கிடைத்தளம், நிலைக்குத்துதளம், $45^0$ சாய்வு ஆகியவற்றை பரீட்சித்தல்

11. மூலை மட்டத்தின் பயன்பாடு யாது?

$45^0$, $90^0$ கோணங்களை அளத்தல், குறித்தல்

12. வலு இயக்கு உபகரணங்களை பயன்படுத்தும் போது பின்பற்றவேண்டிய பாதுகாப்பு விதிமுறைகள் யாவை?

1.விபரக்கூற்றுக்கமைய தெரிவுசெய்தல்

2. உற்பத்தியாளர்களால் வழங்கப்பட்டஅறிவுறுத்தல்களைபின்பற்றல்

13. வலுஇயக்கு உபகரணங்களை அறிவுறுத்தல்கையேட்டில் குறிப்பிட்டவாறு செயற்படுத்துவதால் ஏற்படும் நன்மைகள் 4 தருக?

1. சுயபாதுகாப்பு 2. உபகரணத்தின்பாதுகாப்பு 3. செம்மை 4. சரியானமுடிப்பு

14. வலு உள்ளீடு என்றால் என்ன?

உபகரணத்தை செயற்படுத்த தேவையான வலு.

15. R.P.M என்றால் என்ன?

உபகரணம் ஒன்றின் நிமிடத்திற்கான சுழற்சிகளின் எண்ணிக்கை

16. பல்நோக்கு மரம் அரிவு இயந்திரத்தின் பயன்பாடுகள் 2 தருக?

1. மேற்பரப்பில்சீவுதல் 2. நெடுந்துளையிடல் 3. கழுந்துவெட்டுதல்

17. மின் துறப்பணத்தின் பயன்பாடு 2 தருக?

1. மரம்,உலோகம் ஆகியவற்றில்துளையிடல்

18. சுழலும் சுத்தியல் துறப்பணத்தின் பயன்பாடு யாது?

கொங்கிறீற்கற்களில் துளையிடலுக்கு பயன்படும்

19. திருகுப்பொறியின் பயன்பாடு யாது?

நிறப்பூச்சுக்களை கலத்தல், மற்றும் வேறு கலத்தல் வேலைகள்

20. சுழல் வாளின் பயன்பாடு யாது?

கூரைக்கைமரங்களை வெட்டுதல், அரியப்பட்டமரங்களை துண்டுகளாக்கல்

21. கோணச்சாணைக்கல்லின் பயன்பாடு யாது?

உலோகப்பாகங்களை வெட்டுதல்,தீட்டுதல்

22. மைற்றர்வாளின் பயன்பாடு யாது?

அரிமரம்,உலோகம் ஆகியவற்றை துண்டுகளாக்கல்

23. அதிர்த்திகளின் பயன்பாடு யாது?

கொங்கிறீற் கலவையை நெருக்குதல்

24. தரையோடு, கண்ணாடிதுளைக்கும அலகுகள் எவற்றாலானது?

தங்குதன் காபைட்

25. துளைகொண்ட வாள் அலகின் பயன்பாடு யாது?

பிளாஸ்ரிக்,வெட்டுப்பலகை,உலோகக்குழாய் வெட்டுதல்

26. சுத்தியல் துறப்பண அலகு எதனால் தயாரிக்கப்பட்டது?

பித்தளை, தங்குதன் காபைட்

**<u>அலகு 2 நிருமாணிப்பு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் நுட்பமுறைகள்</u>**

27. தீராந்திகள் அல்லது பலகைகளை சீவி தயார் செய்யும் படிமுறைகள் 4ம் எவை?

1. மேற்பரப்பைசீவுதல் 2. நெற்றிமூட்டைசீவுதல் 3. தடிப்பிற்குசீவுதல் 4. அகலத்திற்குசீவுதல்

28. மரவேலைகளில் நீளத்தை அதிகரிக்க பயன்படுத்தும்பொருத்துக்கள் 3 தருக?

1. அரையாக்குப்பொருத்து 2. தரங்குப்பொருத்து 3. நெற்றிமூட்டுபொருத்து

29. அரையாக்கல் பொருத்து பயன்படும் சந்தர்ப்பங்கள்?

கூரைவேலைகளின்போது நீளத்தை அதிகரிக்க

30. நெற்றிமூட்டு அல்லது முதலைவாய்பொருத்து பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்?

தீராந்தி, வளைகள் இரண்டை ஒன்றுடன் ஒன்று பொருத்துவதற்கு பயன்படும்

31. அரிமரவேலைகளில் அகலத்தை அதிகரிப்பதற்கு பயன்படுத்தப்படும் பொருத்துக்கள்?

1. உதைப்புமூட்டு 2. அரையாக்குமூட்டு 3. நாவாதவாளிப்புமூட்டு 4. தட்டுப்பொருத்து

32. கோண வடிவில் பலகைகளை இணைக்கின்றபொருத்துக்கள்?

1. நேர்இருப்புப்பொருத்து 2. அரைநேர்இருப்புப்பொருத்து 3. மறைபுறாவால் இருப்புபொருத்து

33. பொளிக்கழுந்து பொருத்துக்கள்?

1. நேர்பொளிப்பொருத்து 2. அரைப்பொளிப்பொருத்து 3. சந்துபொளிக்கழுந்துப்பொருத்து

34. மைற்றர் மூட்டுக்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்?

செங்கோண வடிவிலோ அல்லது வேறுஅளவுடைய கோணங்களிலோ மூலைகள் அமையுமாறு பொருத்தல் படச்சட்டகம்,பெயர்ப்பலகை,

35. கெபியன் தடுப்புச்சுவர் எவ்வாறு அமைக்கப்படும்?

கல்வனைசுபடுத்தப்பட்ட இரும்புக்கம்பி அல்லது PVC பிளாஸ்ரிக் உறையிடப்பட்ட உலோகக் கம்பியை பிணைத்து செய்யப்பட்ட கம்பிவலையினால் சதுர அல்லது வட்டவடிவ கூடுகளாக தயாரிக்கப்படும். இதனுள் சாந்துக்கலவை இடப்படாது கருங்கற்கள் அடுக்கப்படும்

☞கெபியன் தடுப்புச்சுவர் அமைக்கப்படுவதற்கான காரணங்கள்?

1. நீரோட்டவேகத்தை தடுத்து மண்ணரிப்பை குறைக்கமுடிதல்
2. நீர் இலகுவாக வடிந்துசெல்லக்கூடிய விதமாக தயார்செய்யமுடிதல்

☞ பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்?

1. ஆற்றங்கரையோர சுவர்கள் உடைந்துவிடுவதை தடுப்பதற்கு
2. கடலரிப்பை குறைப்பதற்கு
3. மலைப்பிரதேசங்களில் நிகழும் மண்ணரிப்பைதடுத்தல்

36. அலுமினியப்பொருத்து வேலைகளின்போது பின்பற்றப்படும் முறைகள்?

1. தறையாணிபயன்படுத்தல் 2. திருகாணிபயன்படுத்தல் 3. தாங்குமுனைப்பைபயன்படுத்தல்

37. தறைதல் மூலம் பொருத்து வேலைகள் செய்யப்படும் சந்தர்ப்பங்கள்?

அலுமினியதகடுகளை இணைத்தல்

38. L வடிவ தாங்குமுணைப்பை பயன்படுத்தி பொருத்தும் சந்தர்ப்பங்கள்?

அகப்பிரிவிடல்கள்,கதவுகள்,கண்காட்சிஅலுமாரிகள் செய்தல்

**அலகு 3 சுமைதாங்கும் மற்றும் சுமை தாங்கா நிருமாணிப்புக்கள்**

39. கட்டமைப்புக்கள் என்றால் என்ன?

எம்மால் ஆக்கப்பட்ட நிருமாணிப்புக்களிலோ அல்லது இயற்கையாக உள்ள நிருமாணிப்புக்களிலோ அவற்றின் சுமையை தாங்கிகொள்ள பாகங்கள் ஒன்றோ பலவோ பொருத்தப்பட்டிருக்கும். இவ் அமைப்புக்களே கட்டமைப்புக்கள் எனப்படும்

40. மனிதனால் ஆக்கப்படும் கட்டமைப்புக்கள் எதனால் ஆக்கப்படுகின்றன?

1. மரம் 2. உலோகம் 3. பிஸாஸ்ரிக் 4. கொங்கிறீற்

41. அமைப்பொன்றை நிர்மாணிக்கும்போது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள்?

வெப்பம், இரசாயனஇயல்பு, பௌதீகஇயல்பு, பொறிமுறைஇயல்பு

42. அன்றாடம் நாம் காணும் கட்டமைப்புக்களிற்கு உதாரணம் தருக?

பாடசாலைகட்டடங்கள், பெருந்தெருக்கள், பாலங்கள்

43. நிருமாணிக்கப்படும் கட்டமைப்புக்களில் காணப்படவேண்டிய இயல்புகள் 4 தருக?

பலம், உறுதி, நீடித்தஉழைப்பு,வடிவம்,பாதுகாப்பு,வளச்சிக்கனம்

44. கட்டுமாணத்தின் அடிப்படைகூறுகள் எவை?

1. தூண்கள் 2. தீராந்திகள், வளைகள் 3. வலுச்சட்டப்படல்கள் 4. வில்அமைப்புக்கள்
5. ஓடுகள், செல்அமைப்புக்கள் 6. தகடுகள்

45. தீராந்திகளை நிறுவும் போது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள் எவை?

இழுவைக்கு தாக்குப்பிடிக்ககூடியதாக இருத்தல்வேண்டும்

46. தீராந்திகளை நிறுவும் முறைகள் எவை?

1. கான்றநெம்புமுறை 2. எளியவிளிம்புமுறை 3. தொடர்முறை 4. கலப்புமுறை

47. வலுச்சட்டப்படல் என்றால் என்ன?

நெருக்கல்விசை, இழுவைவிசை ஆகியவற்றுக்கு தாக்குப்பிடிக்க கூடியவாறு மேற்கொள்ளப்படும் அமைப்பு

48. செல் அமைப்பக்கள் என்றால் என்ன?

வட்டவடிவில் தயார்செய்து சுமையை தாங்குவதற்கு பயன்படுத்தப்படும் அமைப்பு

49. கட்டமைப்புக்களில் தொழிற்படும் சுமைகள் எவை?

1. மாயச்சுமை 2. மாறுசுமை 3.சூழல்சார்சுமைகள் 4. பிறசுமைகள்

50. மாயச்சுமை என்றால் என்ன?

ஏதேனுமொன்றின் மீது நீண்டகாலம் மாறாது நிலவும் நிலையானசுமைகள் மாயச்சுமைகள். கட்டமைப்பின்நிறை,மற்றும் அதன்மீது நிலையாக அமைந்துள்ள பாகங்களின் சுமை ஆகியன அடங்கும்

51. மாறு சுமைகள் என்றால் என்ன?

பொதுவாக நிரந்தரமற்ற இயங்கு சுமைகள். ( பாலத்தின் மேலால் வாகனம் செல்லல்)

52. மாறு சுமையில் செல்வாக்கு செலுத்தும் விடயங்கள்?

1. திருப்பம் 2. அதிர்வு 3. தகைப்பு 4. மொத்தல்

53. சூழல் சார்சுமைகள் என்றால் என்ன?

காலநிலை,தரைத்தோற்றம்,வேறு இயற்கை நிகழ்வுகள் காரணமாக ஏற்படும் சுமைகள்

54. சூழல் சார் சுமைகளிற்கு உதாரணம் தருக?

1. காற்றினாலேற்படுத்தப்படும் சுமைகள்
2. மழை,வெப்பம், தூசிகள்

55. பிற சுமைகள் என்றால் என்ன? உதாரணம் தருக?

கட்டமைப்பை அமைக்கும்போது அதிலுள்ள பதார்த்தங்களில் நடைபெறும் செயற்பாடுகள் காரணமாகவும், வேறு விடயங்கள் காரணமாகவும் ஏற்படும் தாக்கத்தினால் ஏற்படும் சுமைகளே.

உதாரணம்: துருப்பிடித்தல்,வெடிப்பு, நிருமாணிப்பின்போது ஏற்படும் சுமைகள்

56. கட்டடநிர்மாணிப்பின்போது அடிப்படையாக கொள்ளப்படும் விடயங்கள் எவை?

1. நிருமாணிப்பின்திட்டவரைபடம் 2. தேவையான பொருள்களின் பட்டியல்
3. தேவையான உபகரணங்கள் 4. நுட்பமுறைகள் 5. தேவையானநிபுணத்துவஆலோசணை
6. அலங்கரிப்பதற்கானமுடிப்புக்கள் 7. நபர்களின்பாதுகாப்பு

57. ஓர் ஆக்கம் அல்லது நிர்மாணம் ஒன்றிற்கு இன்றியமையாத விடயங்கள் எவை?

1. ஆக்கத்திட்டம் 2. தேவையானபொருள்களின்பட்டியல் 3. தேவையான உபகரணங்கள்
4. ஆக்கத்திற்குபொருத்தமானநுட்பமுறை 5. முடிப்புசெய்தல் 6. நபர்களின்பாதுகாப்பு

58. தயாரித்த ஆக்கத்தின் தெரிவுசெய்யப்பட்ட பாகங்களை ஒருங்குசேர்க்கும் முறைகள்?

1. ஆணிஅறைதல் 2. புரியாணிபிடித்தல் 3. ஓட்டுதல்

59. ஆக்கம் ஒன்றிற்கு முடிப்புச்செய்யும் முறைகள் எவை?

1. வர்ணம் 2. வார்ணிஸ்பூசுதல் 3. கடதாசிஒட்டுதல் 4. காரையிடல்

## <u>அலகு 4. நேர்த்தியாக்கலின் முக்கியத்துவம்</u>

60. நிர்மாணிப்புகளிற்கு நேர்த்தியாக்கல் செய்வதனால் கிடைக்கும் பயன்கள்?

❖ அழகியற்பெறுமானத்தைஏற்படுத்தல் ❖. நற்காப்பு ❖ சுத்தம்செய்தல் இலகு

61. நிர்மாணிப்பில் சேதங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள்?

❖ விலங்குகள்,பூச்சிகளினால்பாதிப்புஏற்படல் ❖.சூரியஒளி,தீ,இரசாயனம்

❖ ஈரலிப்பினால் விரிவடைதலும் சுருங்குதலும் உக்கிப்போவதற்கு காரணமாக அமைகின்றது.

❖ மோதுகையினால் ஏற்படுகின்ற கீறல்களும் தேய்வடைதலும்

62. மரமேற்பரப்புகளிற்கு பயன்படுத்தப்படும் நேர்த்தியாக்கல் முறைகள்?

❖ நிறப்பூச்சு ❖ மினுக்குதல் ❖ அரக்குசாயமிடல் ❖ அடரிடல்

63. ஒப்பமாக்கல் செய்வதற்கு பயன்படுத்தப்படுகின்ற பொருள்கள்,கருவிகள், உபகரணங்கள்?

❖ ஒப்பமாக்கும்சீவுளி, ❖ முள்ளரம், ❖ வழிதகடு

64. மணற்கடதாசி அல்லது அரத்தாளினை எவ்வாறு வகைப்படுத்தியுள்ளனர்?

இதன் கிரிட் இலக்கம் 100 இலும் குறைவு எனின் கரடுமுரடானது, கிரிட் இலக்கம் 100 இலும் கூடியவை எனின் மென்மையான மணற்கடதாசி ஆகும்.

65. நிரப்பிகளின்(PILLAR) பயன்பாடு யாது?

மரத்தில் காணப்படுகின்ற துளைகள்,பழுதுகள்,குழிவுள்ள இடங்களை நிரப்பி சமமட்டத்திற்கு

கொண்டுவருவதற்கு பயன்படும்.

66. நிரப்பிகளாக பயன்படுத்தக்கூடிய பொருள்களும் கலவைகளும்?

❖ மக்குப்பசை ❖. மரத்தூளுடன் சீலர் கலந்து தயாரிக்கப்படும் கலவை

❖. பரிசுச்சாந்தை சீலருடன் கலந்து தயாரிக்கும் கலவை

67.அரிமர ஒப்பமாக்கலில் கவனத்தில் கொள்ளவேண்டியவிடயங்கள் எவை?

வழிதகடு,ஒப்பமாக்குஞ்சீவுளி,அரத்தாள் போன்றவற்றை பயன்படுத்தும்போது மரத்தின் ஆண்டுவளையத்திற்கு சமாந்தரமாக பயன்படுத்தவேண்டும்.

68. நிறப்பூச்சுக்களை தெரிவு செய்யும்போது கவனத்திற்கொள்ளவேண்டிய விடயங்கள்?

❖ வெயில், மழை, ஈரலிப்பு,உப்புத்தன்மை போன்றவற்றிற்கு தாக்குப்பிடித்தல்

❖ நாள் செல்லும்போது நிறமாற்றம்ஏற்படாதிருத்தல் வேண்டும்

❖ பங்கசு,பூஞ்சணம் படர்தலை தடுக்கவேண்டும்

69. முதற்தளப்பூச்சிடல் என்றால் என்ன? உதாரணம் தருக?

முடிப்பு பூச்சாக பூச்சொன்றை பூசமுன்னர் முதலாவது தளப்பூச்சொன்றை பூசுதல்.

உதாரணம்: அலுமினியம்சீலர்,பில்லர்,

70. பூச்சுமை / நிறப்பூச்சு பூசும்போது பின்பற்றவேண்டிய அறிவுறுத்தல் விடயங்கள்?

❖ உற்பத்தியாளர்களினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றவேண்டும்

❖ மரங்களிற்கு பூசும்போது ஆண்டுவளையங்களிற்கு சமாந்தரமாகபூசவேண்டும்

❖ முதல் பூச்சு காய்ந்தபின்னரே இரண்டாவது பூச்சை பூசவேண்டும்

❖ தூரிகைத்தும்பின் மூன்றில் ஒரு பங்கைவிட அதிகமாக பூச்சினுள் அமிழ்த்துதல் கூடாது

71. மரமேற்பரப்பில் மினுக்குவதற்கு பயன்படுத்தப்படுகின்ற பூச்சு வகைகள்?

❖ வார்ணிஸ்பூச்சு ❖ பிரெஞ்சுப்பூச்சு ❖அரக்குப்பூச்சு ❖ மெழுகுப்பூச்சு

72. அரக்கு பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்?

❖ முத்துக்குடைபிடிகளிற்குசாயமிடல் ❖ ஆபரணப்பெட்டிகளிற்கு நிறமிடல்

73. மரப்பலகைகளிற்கு அடரிடல் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள்?

பெறுமதி குறைந்தமரங்களிற்கும்,செயற்கை மரவகைகளான MDF பலகை, கடினஅட்டை போன்றவற்றால் நிர்மாணிக்கப்பட்ட ஆக்கங்களுக்கும் பெறுமதியை உருவாக்கிக்கொள்ள அடரிடல்மேற்கொள்ளப்டுகின்றது

74. சுவரொன்றை நிர்மாணிக்க பயன்படுத்தப்படும் பொருள்கள்?

❖ செங்கல் ❖ சீமெந்து ❖ துண்டக்கல் ❖ கருங்கல் ❖கொங்கிறீற்

75. சுவரை நேர்த்தியாக்கும் முறைகள்?

❖ காரையிடல் ❖ சுவர்ப்பதிகல் பரப்புதல் ❖ மினுக்கியமரஅடைசுபிடித்தல் ❖ சாயம்பூசுதல்

76. வீட்டுத்தரையை நேர்த்தியாக்கும் முறைகள்?

❖ காரையிட்டுசாந்திடல் ❖ தளப்பதிகல்பதித்தல் ❖. சுடுமட்சிலைபதிகல்பதித்தல் ❖ தரைப்பாஇடல்

77. சுவரை நேர்த்தியாக்குவதன் குறிக்கோள்கள்?

❖ அழகு ❖ நீண்டகாலப்பாவனை ❖ ஈரலிப்பிலிருந்துபாதுகாப்பு ❖ துப்பரவுசெய்தல்இலகு

78. காரையிடலுக்கு பயன்படுத்தப்படும் சாந்து வகைகள்?

❖.களிச்சாந்து ❖.சுண்ணாம்புச்சாந்து ❖. சீமெந்துச்சாந்து ❖. சீமெந்துசுண்ணாம்புச்சாந்து

79. காரையிடும் செயன்முறையை ஒழுங்காக குறிப்பிடுக?

1.காரையிடப்போகும்.இடத்தை தயார்ப்படுத்தல் 2. சாந்தைதயாரித்தல் 3.மட்டம்வைத்தல்

4. நிலைக்குத்துமால்வைத்தல் 5. மால்களுக்கிடையில் சாந்தைநிரப்புதல்

6. மால்களுக்கிடையில்மேலதிகசாந்தை மட்டப்பலகையால் அகற்றுதல்

7. நிரப்பப்படாதஇடங்களை மீண்டும்நிரப்புதல் 8. மணியாசுபலகையினால்மட்டம்செய்தல்

9. காரையிடும்கரண்டியினால்தேய்த்தல் 10. தேவையெனின்சுண்ணாம்புக்குழம்புவைத்துதேய்த்தல்

80. காரையிடும் செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள்?

❖ கம்பித்தூரிகை ❖ அரிதட்டு ❖ சாந்துக்கரண்டி ❖தும்புத்தூரிகை ❖ மட்டக்கம்பு

81. சுவர்,நிலத்திற்கு தளப்பதிகல் பதிக்கும்போது பின்பற்றவேண்டிய விதிமுறைகள்?

❖ பதிகற்களை நீரில் நன்கு ஊறவைத்தல் வேண்டும்.

❖ சீமெந்துக்களியை நனைத்த பதிகல்லின் பின்பக்கத்தில் கரண்டியினால் மட்டமாக்கியதன்பின்னர் சுவரில் பதித்தல்வேண்டும்

82. பல்வணி தயாரிக்கப்படும் முறையை கூறுக?

ஒருபக்கநீளம் 40 மி.மீற்றரைவிடகுறைந்த செவ்வகவடிவான,அறுகோணவடிவான,எரிக்கப்பட்ட பீங்கான்ஓடுகள்,அல்லது கண்ணாடித்துண்டுகள் பல்வேறு வடிவங்களில்அமையுமாறு கௌகைட் கடதாசி மீது ஒட்டுவதன்மூலம் இவை தயாரிக்கப்படும்

83. அமிழ்த்துதல் முறை பூச்சுமுறை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம் யாது?

சிறு அளவிலான ஆக்கங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல்

## அலகு 5 நீர்க்குழாய்த்தொகுதியும் அதன் துணைப்பாகங்களும்

84. சுத்தமான நீரின் Ph பெறுமானம் யாது?

7

85. குழல்கள் (tubes) என்றால் என்ன?

குறைந்த அமுக்கத்தின் கீழ் திரவத்தை கொண்டுசெல்ல பயன்படுபவை

86. குழாய்கள் (pipes) என்றால் என்ன?

உயர் அமுக்கத்தின்கீழ் திரவத்தை கொண்டுசெல்ல பயன்படுபவை

87. திரவங்களை கொண்டு செல்லும் குழாய்கள் உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருள்கள்?

1. உலோகங்கள் 2.கல்வனைசுப்படுத்தப்பட்டகுழாய்கள் 3. P.V.C குழாய்கள்

88. கல்வனைசு குழாய்கள் எவ்வாறு உற்பத்திசெய்யப்படுகின்றன?

இரும்பினால் தயாரிக்கப்படும் குழாய்களின் மீது நாக உலோகத்தை பூசுவதன்மூலம்

89. கல்வனைசு குழாய்களில் நீலநிறவளையத்தை கொண்டவை எவ்வாறானவேலைகளிற்கு பயன்படும்?

பாரம்குறைந்த இலகுவானவேலைகளிற்கு

90. கல்வனைசு குழாய்களில் மஞ்சள் நிறவளையத்தை கொண்டவை எவ் வேலைகளுக்கு பயன்படும்?

குழாய்களின்சுவர் தடிப்பானதாகையால் சாதாரணவேலைகளுக்கு பயன்படும்

91. கல்வனைசு குழாய்களில்சிவப்பு நிறவளையத்தை கொண்டவை எவ் வேலைகளுக்கு பயன்படும்?

குழாய்களின்சுவர் தடிப்பானதாகையால் அதிகஅமுக்கத்தை தாங்கும் வேலைகளுக்கு

92. வார்ப்பிரும்புக்குழாய்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் எவை?

பெரியளவிலான நீர்வழங்கள் செயற்றிட்டங்களில் நிலத்திற்குமேலாக,கீழாகதிரவங்களை கொண்டுசெல்ல

93. வார்ப்பிரும்புக்குழாய்களிலுள்ள அனுகூலங்கள் 3 தருக?

1.துருப்பிடிக்காமை 2. உயர்அமுக்கநிலைமைகளைதாங்கக்கூடியதாகஇருத்தல்

3. பல்வேறு வகையானதிரவங்களை கொண்டுசெல்லக்கூடியதாகஇருத்தல்

94. செப்புக்குழாய்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?

1. சூடானநீரை கொண்டுசெல்லல் 2. காற்றுக்கட்டுப்படுத்தல்தொகுதியைஅமைத்தல்

95. UPVC குழாய் என்பதால் கருதப்படுவது?

போலிவைனல் குளோரைட் எனும் நீட்டத்தகு இயல்புஅற்ற பிளாத்திக்குழாய்

96. U.P.V.C குழாய்களில் அச்சிடப்படும் விடயங்கள் எவை?

வர்த்தககுறியீடு( sloan, anton). SLS தரச்சான்றிதழ், வெளிவிட்டம், தரநிர்ணயஇலக்கம் type ( paskal)

97. UPVC குழாய்களின் நிறம், அவற்றின் நிறம் ஆகியவற்றை குறிப்பிடுக?

பிரித்தானியநியமம்: 3m,6m,9m இலங்கைநியமம் : 4m, 6m நிறம் : சாம்பல்

98. நீர்வழங்கள்வேலைகளின்போது திரவக்கழிவுகளை அகற்றும் வேலைகளுக்கு வார்ப்பிரும்பு குழாய்களை விட UPVC குழாய்கள் பயன்படகாரணம்?

1. துருப்பிடிக்காது, எண்ணெய்,மதுசாரம்,உப்புக்கலந்த நீர் ஆகியவற்றால பாதிப்படையாது
2. நிறைகுறைவானதால் கொண்டுசெல்லல்,பொருத்துதல் இலகு
3. சிதைவடையாதபடியால் நிலத்திற்கு கீழேயும்,மேலேயும் இடமுடிதல்

99. CPVC குழாய் என்றால் என்ன?

குளோரினூட்டப்பட்ட பொலிவைனல் குளோரைட் எனும் பிளாஸ்ரிக்வகையால் தயாரிக்கப்பட்ட குழாய்

100. PVC குழாய்களை விட CPVC குழாய்கள் பிரபல்யமடைய காரணம்?

1. சூழல்நேயமுடையது 2. நீண்டநாட்களுக்கு பயன்படுத்தக்கூடியது 3. துருப்பிடிக்காது

4.எளிதில்தீப்பற்றாது 5.கசிவுஏற்படாதவாறு ஒட்டக்கூடியது

101. GPVC குழாய்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்?

நீர் விநியோகதொகுதியில் உயர்அமுக்கத்தையும்,கூடுதலான கொள்ளளவையும் கொண்ட நீர்த்தொகுதியை கொண்டுசெல்வதற்கு நிலத்தினடியில் அமிழ்த்தி நீர்க்குழாய் தொகுதியை அமைக்க

102. நீர்வழங்கள் தொகுதியில் வால்வினை பயன்படுத்துவதன் நோக்கம்?

1. நீர்வழிந்தோடும்அளவினைகட்டுப்படுத்தல் 2. நீர்திரும்பிவழிந்தோடுவதைதடுத்தல்

103. நீர் வழங்கல்தொகுதியில் பயன்படுத்தப்படும் வால்புகள்?

1. நிறுத்தும்வால்பு 2. படலைவால்பு 3. பந்துக்குண்டுவால்பு 4. பாதவால்பு

104. PVC குழாய்களை இணைப்பதற்கு பயன்படுத்துகின்ற பொருள்கள்?

கரைதிரவசீமெந்து, புரியிடைநாடா, உகோலமரியும்வாள்,குழாய்அகற்சிக்கருவி, சீராக்கத்தக்கபுரியாணிசாவி, ஊதுவிளக்கு

105. நீர்க்குழாய்வேலைகளில் சுகாதாரம்பேணும் பொருத்திகள்?

கழுவும்தொட்டி, மலகூடபேசன்( கழிவறைதொட்டிகள்),

106. நீர்க்குழாய் பொருத்தப்படும் விதம்?

1. குழாயைவெட்டுதல் 2. விளிம்பைதுப்பரவுசெய்தல் 3. திரவசீமெந்துபூசுதல் 4. பொருத்துதல்

5. உலர்த்துதல் 6. நிலைப்படுத்தல்

107. நீர்க்குழாய்களை நிலைப்படுத்தலில் பின்பற்றப்படும் முறைகள்?

1. நிலத்தில்கான்தோண்டி அதனுள் குழாய்களை வைத்து மண்ணினால் மூடிவிடல்
2. குழாய் நிலைப்படுத்தி கொளுக்கிகள்மூலம் ஆதாரமொன்றின்மீது பொருத்துதல்
3. செங்கற்கட்டு அல்லது கொங்கிறீற் கட்டுகளுக்கு இடையில் அமைத்தல்

**அலகு 9 மேனிலைத்தொழினுட்பக் கல்வி வாய்ப்புக்கள்**

108. NVQ என்பதால் கருதப்படுவது?

தேசிய தொழிற்தகமைகள்.

109. இலங்கையில் தொழிற்கல்வியை வழங்கும் நிறுவனங்கள் எங்கு தமது பதிவைஉறுதிப்படுத்தவேண்டும்

மூன்றாம் நிலைத்தொழிற்கல்வி ஆணைக்குழுவில்

110. NVQ மட்டங்களுக்குரிய தேர்ச்சிகள்

மட்டம் 1 தேசியசான்றிதழ் அடிப்படை,தொடக்கஆற்றலுள்ள தொழில்வினைஞர்

மட்டம் 2 தேசியசான்றிதழ் தொடர்ச்சியான மேற்பார்வையின்கீழ் செயற்படும் தொழில்வினைஞர்

மட்டம் 3. தேசியசான்றிதழ் ஒருகுறித்த மட்டத்தில் மேற்பார்வையின் கீழ் செயற்படத்தக்கவர்கள்

மட்டம் 4 தேசியசான்றிதழ் சுயாதீனமாக செயற்படதக்க நுட்பர்கள்

மட்டம் 5 தேசியடிப்ளோமா மேற்பார்வையாளர்கள்( முகாரி)

மட்டம் 6 தேசியடிப்ளோமா முகாமையாளர்கள்

மட்டம் 7 பட்டதாரி மட்டம் வரைஞர்கள்

111. இலங்கையிலுள்ள அரசாங்க,பகுதிஅரசாங்க நிறுவகங்களில் பாடநெறியை கற்று பெறததக்க சான்றிதழ்?

தொழிநுட்பக்கல்லூரிகள், தொழிநுட்பவியல்கல்லூரி: NVQ 3,4,5,6

தொழிற்பயிற்சிஅதிகாரசபை: NVQ 3,4,

தேசியஇளைஞர்சேவைமன்றங்களில்: NVQ 3,4,

UNIVOTEC : NVQ 7

இலங்கைஜேர்மன்தொழிநுட்பக்கல்லூரி: NVQ 3,

112. RPL முறை என்றால் என்ன?

தொழிலிலான பயிற்சியின்மூலம் அல்லது வேலை அனுபவத்தின்மூலம் பெறப்பட்ட முன் அறிவை வெளிப்படுத்தல் அல்லது நிருபித்தல் மூலம் NVQ சான்றிதழை பெறுதல்

113. RPL முறையில் தேர்ச்சி பெற்றுள்ளமையை உறுதிப்படுத்த முன்வைக்கவேண்டிய சான்றுகள்?

1. தேர்ச்சி மேற்பார்வை அலுவலரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பயிற்சி,வேலை தொடர்பாக பெற்ற தேர்ச்சிகளை உறுதிப்படுத்தும் தினசரி அறிக்கைகள்
3. தமது நிர்மாணிப்பு வேலை மாதிரி
4. தமது தேர்ச்சியை உறுதிப்படுத்தும் சேவைச்சான்றிதழ்கள்
5. செய்முறை பரீட்சைகளுக்கு தோற்றல்